தி அசைலம் சீக்கர் ரிசோர்ஸ் செண்டர் -ASRC ஆஃப்சைட்டாக திங்கள்-வெள்ளி காலை 10 முதல் மாலை 5 மணி வரை செயல்படும். **உதவி தேவைப்பட்டால் 03 9326 6066 என்ற எண்ணை அழைக்கவும்.**

நீங்கள் ஃபுட்ஸ்கிரேவில் உள்ள இந்த மையத்திற்கு திங்கள், செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் (காலை 10 - மாலை 4) பார்வையிட வரலாம். இந்த நாட்களில் என்னென்ன சேவைகள் கிடைக்கிறது என்பதை அறிய, வருவதற்கு முன்பாக கால் செய்து அறிந்து கொள்ளவும் (அல்லது கீழே பார்க்கவும்).

எங்கள் அலுவலகம் புதன்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மூடப்பட்டிருக்கும்.

# இந்த நாட்களில் உதவி தேவைப்பட்டால் 03 9326 6066 என்ற எண்ணை அழைக்கவும்.

---

நீங்கள் உறுப்பினர் இல்லையென்றாலும் எங்களால் உங்களுக்கு உதவ முடியும். ASRC எப்படி உங்களுக்கு உதவ முடியும் என்று அறிய 03 9326 6066 என்ற எண்ணை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை (திங்கள் – வெள்ளி) அழைத்து அறியலாம்.

மிகவும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் அழைப்பதால், ASRC வரவேற்பு எண்ணைப் பெற சிறிது நேரம் ஆகலாம். தயவுசெய்து தொடர்ந்து முயற்சிக்கவும் அப்படியும் அழைப்பு கிடைக்கவில்லையென்றால், நிறுத்தி விட்டு சிறிது நேரம் கழித்து மீண்டும் முயற்சி செய்யவும். காலை 10.00 மணிக்கு லைன்கள் முதலில் திறக்கப்படும்போது அழைப்பது சிறந்தது அல்லது அதே நாளில் பின்னர் அழைக்கலாம்.

## **ASRC சேவைகள் உங்களுக்கு உதவுவதற்காகவே செயல்படுகிறது.**

**உணவு வங்கி**

நீங்கள் தற்போதைய ASRC உறுப்பினராகவும் உணவு வங்கியை அணுகத் தகுதியுடையவராகவும் இருந்து, உணவு உங்கள் வீட்டிற்கு வழங்கப்படும் தேவை ஏற்பட்டால், தயவு செய்து 03 8537 9549 என்ற எண்ணை அழைக்கவும் அல்லது foodbankbookings@asrc.org.au என்ற மின்னஞ்சலுக்கு தகவல் அனுப்பவும். வாரம் முழுவதும் வீட்டிற்கு உணவு டெலிவரி செய்யப்படும்.

உணவுத் தேவை சம்பந்தமான மற்ற எல்லாவித விசாரணைகளுக்கும் 03 9326 6066 என்ற எண்ணை அழைக்கவும், நாங்கள் உங்களுக்கு உதவுவோம்.

ஃபுட்ஸ்கிரேயில் உள்ள ASRC உணவு வங்கி திங்கள், செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் கீழ்க்கண்ட நேரங்களில் திறந்திருக்கும்:

- காலை 11 மணி - மதியம் 12:30 மணி
- மதியம் 1 மணி - மாலை 3:30 மணி

**சாப்பாடு**

பார்சல் சாப்பாடு தற்போது கிடையாது.

**ஹெல்த்கேர்**

ஹெல்த் கிளினிக் குறைந்த கிளினிக் நேரங்களில் **நேரடி அப்பாயிண்ட்மெண்ட்டுக்காக** காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை கீழ்க்கண்ட நாட்களில் திறந்திருக்கும்:

ஆகஸ்டு

- ஆகஸ்டு மாதத்தில் செவ்வாய் 11, வியாழன் 13
- ஆகஸ்டு மாதத்தில் திங்கள் 24, செவ்வாய் 25, வியாழன் 27

செப்டம்பர்

- செப்டம்பர் மாதத்தில் திங்கள் 7, செவ்வாய் 8, வியாழன் 10

**மற்ற நாட்களில் உதவிக்கு ஏற்பாடு செய்ய** நீங்கள் ஹெல்த் கிளினிக்கை காலை 10 மணி - மாலை 4 மணி வரை (திங்கள்-வெள்ளி) நீங்கள் 03 9274 9898 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது health@asrc.org.au என்ற மின்னஞ்சலுக்கு தகவல் அனுப்பலாம்.

**நீங்கள் COVID-19 அறிகுறிகளுடன் உடல் நலமற்று இருந்தால்**, தயவுசெய்து அதிகாரப்பூர்வ சோதனை மையங்களில் சோதித்துக் கொள்ளவும். மேலதிக தகவலுக்கு இங்கு கிளிக் செய்யவும் அல்லது https://www.dhhs.vic.gov.au/getting-tested ஐப் பார்வையிடவும். இந்தச் சோதனை அனைவருக்கும் இலவசம் (DHHS வழிகாட்டுதல்களை இங்குபார்க்கவும்). தயவு செய்து உங்களுடன் அடையாளச் சான்றை எடுத்துச் செல்லவும்.

**மருத்துவ அவசரநிலை இருந்தால்** நேராக உங்கள் அருகிலுள்ள பொது மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்குச் செல்லவும் அல்லது 000 என்ற எண்ணில் ஆம்புலன்ஸை அழைக்கவும். விக்டோரியாவில், புகலிடம் கோருபவர்களுக்கு மருத்துவமனை அவசரகால சேவைகள் மற்றும் ஆம்புலன்ஸ்கள் கட்டணமின்றி வழங்கப்படுகின்றன.

**வீட்டு வசதி**

நீங்கள் வீடற்ற நிலையிலோ அல்லது அது போன்ற ஆபத்தை எதிர் நோக்கியோ இருந்தால், தயவு செய்து 03 9326 6066 என்ற எண்ணை காலை 10 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையே (திங்கள் - வெள்ளி) அழைக்கலாம் மற்றும் உங்களுக்காக ஒரு ASRC பணியாளர் அழைப்புக்கு ஏற்பாடு செய்யப்படும்.

**பொருட்கள் மற்றும் இதர அடிப்படைத் தேவைகள்**

**நீங்கள் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்த வேண்டியிருந்தால்,** நாங்கள் மைக்கியுடன் உங்களுக்கு உதவ முடியும். தயவு செய்து காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரை (திங்கள் - வெள்ளி) material_aid@asrc.org.au என்ற மின்னஞ்சலுக்கு தகவல் தரவும் அல்லது 03 9326 6066 என்ற எண்ணை அழைக்கலாம் மற்றும் உங்களுக்காக ஒரு ASRC பணியாளர் மூலம் மறுஅழைப்புக்கு ஏற்பாடு செய்யப்படும்.

**உங்களுக்கு குழந்தை இருந்தால் நாங்கள் உங்களுக்கு நேப்பீஸ் தந்து உதவ முடியும்.** தயவு செய்து காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரை (திங்கள் - வெள்ளி) material_aid@asrc.org.au என்ற மின்னஞ்சலுக்கு தகவல் தரவும் அல்லது 03 9326 6066என்ற எண்ணை அழைக்கலாம்

மற்றும் உங்களுக்காக ஒரு ASRC பணியாளர் மூலம் மறுஅழைப்புக்கு ஏற்பாடு செய்யப்படும்.

**நீங்கள் இதர தேவைகளுக்கு பணம் செலுத்துவதில் பிரச்சனை இருந்தால்** எங்களால் உதவ முடியும். தயவு செய்து காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரை (திங்கள் - வெள்ளி) 03 9326 6066 என்ற எண்ணை அழைக்கலாம் மற்றும் உங்களுக்காக ஒரு ASRC பணியாளர் மூலம் மறுஅழைப்புக்கு ஏற்பாடு செய்யப்படும்.

**சட்ட உதவி**

ASRC மனித உரிமைகள் சட்ட அமைப்பு, ஒரு தனியார் வழக்கறிஞரை வைத்துக் கொள்ள முடியாத மற்றும் அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட சட்ட ஆலோசனையை அணுக முடியாத புகலிடம் கோருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்க முடியும்.

ASRC சட்டக் குழு எங்கள் ஃபுட்ஸ்கிரே மையத்தில் தற்போது இல்லை. இந்த சமயத்தில் ஒரு வழக்கறிஞரைப் பார்க்க தயவு செய்து மையத்திற்கு வர வேண்டாம். **சட்ட சேவையில்** நீங்கள் ஏற்கனவே வாடிக்கையாளராக இருந்தால் தயவுசெய்து 03 9274 9889 என்ற எண்ணை செவ்வாய்/வியாழன்/வெள்ளிக்கிழமைகளில் காலை 10.30 மணி-மாலை 2 மணிக்கு இடையே அழைக்கவும்.

**நீங்கள் புது வாடிக்கையாளராக இருந்தால்** திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் காலை 10:30 மணியி முதல் மதியம் 12 மணி

வரை தொலைபேசி வழியாக 0478 700 605 என்ற எண்ணை அழைப்பதன் மூலம் சட்ட ஆலோசனை பெற முடியும்.

**வேலை வாய்ப்பு ஆதரவு**

ASRC வேலைவாய்ப்பு திட்டம் நேரடி அப்பாயிண்ட்மெண்ட்களுக்கு மூடப்பட்டுள்ளது, ஆனால்  வேலையைக் கண்டுபிடிப்பதில் இன்னும் உங்களுக்கு உதவ முடியும். **நீங்கள் ஏற்கனவே திட்டத்தின் உறுப்பினராக இருந்தால்**  நீங்கள் மின்னஞ்சல், தொலைபேசி அல்லது ஸ்லாக் மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளலாம். **நீங்கள் ஏற்கனவே ASRC வேலைவாய்ப்பு திட்டத்தின் உறுப்பினராக இல்லையென்றால்** தயவு செய்து 03 9326 6066 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும் அல்லது மேலதிகத் தகவலுக்கு இங்கு கிளிக் செய்யவும்.

**கேஸ்வொர்க்: தகவல், ஆதரவு மற்றும் பரிந்துரைகள்**

நீங்கள் ASRC க்கு புதியவராகவோ அல்லது தற்போதைய உறுப்பினராகவோ இருந்தால், ASRC இல் ஒரு கேஸ்வொர்க்கரை நீங்கள் அணுக முடியும், அவர் உங்களுக்கு தகவல்களை வழங்குவார், உங்களுக்கு ஆதரவை அளித்து மற்றும் உங்கள் நலனுக்காக செயல்படலாம் மற்றும் ASRC சமூகத்தில் உள்ள பிற சேவைகள் மற்றும் வெளி சேவைகளுக்கு உங்களைப் பரிந்துரைக்கலாம்.

**இந்த ஆதரவை அணுகுவதற்கான எங்கள் ட்ராப்-இன் சேவை தற்போது கிடைக்கவில்லை.** தயவு செய்து 03 9326 6066 என்ற எண்ணில் திங்கள்/செவ்வாய்/வியாழன்/வெள்ளிக்கிழைமைகளில் காலை 11 மணியிலிருந்து மாலை 3 மணி வரை அழைக்கலாம் மற்றும்

உங்களுக்காக ஒரு ASRC பணியாளர் மூலம் மறு அழைப்புக்கு ஏற்பாடு செய்யப்படும்.

**கல்வி**

நேரடி அப்பாயிண்ட்மெண்ட்களுக்கு ASVET திட்டம் மூடப்பட்டுள்ளது, ஆனால் தொலைபேசி அடிப்படையிலான பாடநெறி ஆலோசனை, தகவல் மற்றும் பரிந்துரைகளை இன்னும் வழங்கி வருகிறது. ஒரு அப்பாயிண்ட்மெண்ட்டைப் பெற (உங்கள் அப்பாயிண்ட்மெண்ட் தொலைபேசியில் மட்டும்), தயவு செய்து 03 9274 9807 or 03 9274 9834 என்ற எண்ணை (திங்கள்-வெள்ளி) காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரை அழைக்கலாம்.

**தடுப்புக்காவல் உரிமைகள் வக்காலத்து திட்டம் (DRAP)**

எங்கள் ஆஃப் ஷோர் மற்றும் ஆன் ஷோர் தடுப்புக்காவல் வாடிக்கையாளர்களை ஆதரிக்க DRAP குழு வழக்கம் போல் செயல்படுகிறது. எங்களின் DRAP தொலைபேசிக்கு whatsapp செய்யவும் – (+61) 04 2667 9247 எங்களின் ஒரு கேஸ் பணியாளர் உங்களைத் தொடர்பு கொள்வார்.

---

## COVID-19 என்று அழைக்கப்படும் கொரோனா வைரஸ் என்றால் என்ன?

COVID-19 குறித்த மொழிபெயர்க்கப்பட்ட (**தகவலுக்கு**) இந்த தளத்திற்கு செல்லவும் sbs.com.au/language/coronavirus

கொரோனா வைரஸ் (COVID-19) பற்றிய கூடுதல் தகவல்களையும் ஆலோசனையையும் பெறலாம் - அறிகுறிகள், பயணம் மற்றும் தொற்றின் அபாயத்தைக் குறைக்க என்ன செய்ய வேண்டும் போன்றவற்றிற்கு இங்கு செல்லவும்: dhhs.vic.gov/coronavirus

**நீங்கள் COVID-19 நோய் அறிகுறிகளுடன் உடல் நலமற்றவராக உணர்ந்தால்**, தயவுசெய்து அதிகாரபூர்வ சோதனை மையங்களில் பரிசோதித்துக் கொள்ளவும். https://www.dhhs.vic.gov.au/getting-tested ஐப் பார்வையிடவும். இந்தச் சோதனை அனைவருக்கும் இலவசம். தயவு செய்து உங்களுடன் அடையாளச் சான்றை எடுத்துச் செல்லவும்.

---

# தகவல் தாள்கள்

**பின்வரும் தலைப்புகள் பற்றிய தகவல் பக்கங்கள் ASRC இணையத்தளம் வழியாக கிடைக்கின்றன**

- சமூக இடைவெளி மற்றும் தனிமைப்படுத்தல் சட்டங்கள் இங்கு.
- கொரொனாவைரஸ் ஹாட்லைன் மற்றும் உங்கள் தகுதி இங்கு.
- நீங்கள் வேலையை இழந்தால் நாங்கள் உங்களுக்கு எவ்வாறு உதவ முடியும் இங்கு.
- நீங்கள் பரிசீலிக்கக்கூடிய இதர விஷயங்கள் இங்கு.

**கல்வி மற்றும் பயிற்சித் துறை வழியாக பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு கூடுதல் தகவல்கள் கிடைக்கின்றன**

education.vic.gov.auஐப் பார்வையிடவும்

- ஆன்-சைட் கற்பித்தலுக்குத் திரும்பவும் (மொழிபெயர்க்கப்பட்டது)
- ”உங்கள் குழந்தையுடன் பேசுதல்” , “உங்கள் மொழியில் ஆலோசனை” இவற்றின் கீழ் பொது ஆலோசனை (மொழி பெயர்க்கப்பட்டது)
- கொரோனா வைரஸ் (COVID-19) ஐப் பற்றி உங்கள் குழந்தைகளுடன் பேசுவது பற்றிய எளிதான வாசிப்பு வழிகாட்டி